1996 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு.. வி. பி. ஆர். ரமேஷ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

77—

மீனவர்களுக்கு வீடுகள் கொடுத்தல்

* ***73342*** திரு. வி. பி. ஆர். ரமேஷ்:

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் வாழும் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு ஒவ்வொரு ஆண்டும் கடலோரப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டி வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் *1992-93, 1993-94, 1994-95* மற்றும் *1995-96*-ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடி மண்டலத்துக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

முற்பகல் 11-05

திரு. வி. பி. ஆர். ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலுள்ள கடற்கரையில் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கிறித்துவ மீனவர்கள் குடிசைகளில் வசித்து வருகிறார்கள். கடந்த புயலால் அனைத்துக் குடிசைகளும் நாசப்படுத்தப்பட்டாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த முதல்வரும் செய்யாத அளவிற்கு நேரிலேயே குடிசைப் பகுதிகளுக்கு வந்து ஆறுதல் கூறி, குடிசைகள் கட்டிக் கொடுக்க உடனே உதவி செய்வதாகவும் கூறினார்கள். சமீபத்தில் கடற்கரையில் குடிசைகள் தீப்பிடித்துபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிலே சென்று ஆறுதல் கூறினார்கள்.

இந்தக் குடிசைகளில் வாழும் கிறித்துவ மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்த புரட்சித் தலைவி அவர்களுடைய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்து, எப்போது எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை சிதம்பரனார் மாவட்டத்திற்கு என மொத்தம் 3,057 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 1,000 வீடுகள் மீனவர்களுக்கு இலவசமாகக் கட்டித் தருக்கின்றதை மாற்றி, ஆண்டு ஒன்றுக்கு 2,000 வீடுகள், ஏறக்குறைய 5 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில், அதுவும் ஒவ்வொரு வீடும் ரூ. 26,000/- செலவில் அந்த வீடுகளை மீனவர்களே கட்டிக் கொள்ளலாம் என்கின்ற ஒரு உத்தரவை, இந்தியாவில் எந்தவொரு மாநிலத்திலும் செயல்படுத்தமுடியாத உத்தரவை தமிழகத்திலே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பிறப்பித்ததன் அடிப்படையிலே மீனவர்களுக்குத் தேவையான வீட்டை அவர்களே கட்டிக் கொள்ள இன்றைக்கு ஒரு புதியத் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே எவ்வளவு வீடுகள் வேண்டுமானாலும் கட்டித் தருவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால், மீனவர்கள் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால் மூன்று சென்ட் நிலத்தை மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலமாக அளித்து தீர்மானத்தைப் போட்டு அரசாங்கத்திற்கு வைப்பார்கள் எனில் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமேஷ் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 78, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

78—

கதர்த் துணியில் புதிய வடிவமைப்புகள்

*** 87424 டாக்டர் (திருமதி) பீட்ரிக்ஸ் டி' சோசா:***

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—